1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இந்நிதியாண்டில் திருப்பூர் நகராட்சியில் "சலவைத் துறை" கட்ட குறைந்தது 1 லட்சம் ரூபாய் ஒதுக்குமாறு கேட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் இப்பொழுது முடிவுறுகிறது. ஆனால் இன்னும் சில கேள்விகள் பதிலளிக்கப் படாமல் இருக்கின்றன. இந்தக் கேள்விகளை இன்றைக்கு எடுத்து முடித்துவிடலாமா அல்லது மறு நாளைக்கு ஒற்றி வைக்கலாமா என்பதிலே அவையினுடைய கருத்தை அறிய விரும்புகிறேன். (சிறிது நேரத்திற்குப் பிறகு) கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கேள்விகள் கொடுத்து எவ்வளவோ நாட்கள் காத்திருந்து அவையின் முன்னால் பதில் அளிக்கும்போது ஒரு உபகேள்வி கூட கேட்க வாய்ப்புக் கொடுக்காமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். அதற்கு பதிலாகக் கேள்விகளை ஒத்தி போடுவது நல்ல முறை. அவையில் சமயம் இல்லையென்றால் இன்னொரு நாள் இந்தக் கேள்விகளை எடுத்துக்கொண்டு உறுப் பினர்கள் உப கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுப்பது தான் 'டெமாக்ரடிக் செட்அப்' பின் நிலையாக இருக்கும். ஆகவே, இன்று சமயம் இல்லையென்று கருதினால் தலைவர் அவர்கள் இந்தக் கேள்விகளை இன்னொரு தினத்திற்கு மாற்றித் தொடருவது நல்லது என்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாதாரணமாகக் கேள்வி களுக்குப் பதில் அளிக்கும்போது சட்டசபையின் மரபு—பாராளு மன்றத்திலும் பின்பற்றுவது—அந்தக் கேள்விக்களுக்கான விவரமான பதில்களை அச்சடித்து அவையின்முன் வைத்து விடுவதுதான். ஒரு மணி நேரத்தில் ஆறு அல்லது ஏழு கேள்விகளை எடுத்துக்கொண்டு ஏராளமான துணைக் கேள்விகளை அனுமதித்துவிட்டு மற்றக் கேள்விகளை அச்சடித்துக் கொடுத்து விடுகின்ற மரபைக் கையாளலாமா? திரு. தங்கமணி அவர்கள் பாராளுமன்றத்திலே இருந்திருக்கிறார்கள். அங்கேயெல்லாம் அதைத்தான் செய்கிறார்கள். அந்த மாதிரியான மரபைக் கடைப் பிடிக்கலாம் என்று நம்முடைய அவை முடிவுக்கு வந்தால்கூட அது சட்டப் பேரவை தலைவருக்கு மகிழ்ச்சியான ஒன்றாகத்தான் இருக்கும்.

அடுத்து கேள்வி எண் 92. . .

Lac Industry in Denkanikota area

* 92 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to revive the lac industry in Denkanikota area; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லே.

(இ) இக் கேள்விக்கு இடமில்லே.

Victims involved in accidents.

* 93 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the amount disbursed to victims involved in accidents, viz., (1) employees and (2) third parties by the State Transport Department during 1969-70-71?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

ஆண்டு.	தொழிலாளர் இழப்பீட்டுத் தொகையாகப் பணியாளர்களுக்குக் கொடுத்த தொகை:	நீதிமன்றங்கள் மூலம் மூன்றும் நபர்களுக்கு வழங்கிய தொகை.	பேச்சுவார்த்தைகள் மூலம் செலுத்தப் பட்ட தொகை.
(1)	(2)	(3)	(4)
1969–70	இல்லே	2,35,323·25	13,080·16
1970–71	15,000.00	7,82,431·61	5,954·46

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த மாதிரித் தொகை கொடுக்கும்போது இன்ஷூரன்ஸ் செய்வதன் மூலம் தொகை கொடுக்க ஏற்பாடு செய்தால் குறைவாக இருக்குமா? இதிலே எந்த முறை லாபகரமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

State Transport Central Workshop at Chromepet.

* 94 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there was any fire accident in the State Transport Central Workshop at Chromepet about the 5th June 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) குரோம்பேட்டையில் அரசுப் போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களிரியின் உதிரிப்பாகங்கள் பண்டகசாலேக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதவாக்கெட்ட வண்டிகளில் ஒன்று 5—6—1971 அன்று காலே சுமார் 10-49 மணிக்குத் தீப்பிடித்துக் கொண்டது. அதற்கு அருகில் இருந்த மற்ருெரு வண்டிக்கும் அத்தீ பாவியது. இரண்டு வண்டிகளும் சேதமடைந்தன. தீயணைப்புப் படையின் உதவியால் காலே சுமார் 11-15 மணிக்குத் தீ முழுவதும் அணேக்கப்பட்டது.